நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்**

First Published : 03 Mar 2010 01:00:06 AM IST

புதுச்சேரி, மார்ச் 2: புதுச்சேரி கிருமாம்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

÷புதுச்சேரி சுற்றுச்சூழல் கல்விப்பிரிவு பயிற்சி மையம் மற்றும் சி.பி.ஆர். சுற்றுச்சூழல் கல்வி மையம் சார்பில் இம் முகாம் நடைபெற்றது.

÷முதல் நாளன்று சுற்றுச்சூழல் விழிப்புணர்வு சைக்கிள் ஊர்வலத்தை பள்ளி தலைமை ஆசிரியர் ஆர்.பாலசுப்பிரமணியம் தொடங்கி வைத்தார். புவி வெப்பமடைதலின் விளைவுகள் குறித்து பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.÷2-ம் நாள் சாலையை தூய்மை செய்து மரக்கன்றுகள் நடப்பட்டது. இதில் துணை தலைமை ஆசிரியர் எஸ்.சம்பத், ஆசிரியைகள் வினோதினி, சுதா, விஜயவள்ளி, முதலியார்பேட்டை அரசு நடுநிலைப் பள்ளி ஆசிரியர் ஆர்.தட்சிணாமூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

÷3-ம் நாள் நடைபெற்ற நிறைவு விழாவில் முகாமில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

**மூலிகை பயிர் கண்காட்சி**

First Published : 03 Mar 2010 05:51:46 AM IST

திருவண்ணாமலை, மார்ச் 2: மத்திய அரசு கள விளம்பர அலுவலகம், வனத்துறை, சினம் தொண்டு நிறுவனம், தமிழ்நாடு பாரம்பரிய சித்த வைத்திய மகா சங்கம் சார்பில் மூலிகைக் கண்காட்சி திருவண்ணாமலை அடுத்த புதுமல்லவாடி கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது (படம்).

நிகழ்ச்சிக்கு மாவட்ட வன அலுவலர் ஆர்.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். வேலூர் மண்டல வனப்பாதுகாவலர் அ.வ.வெங்கடாசலம் தொடங்கி வைத்தார்.

கள விளம்பர அலுவலர் டாக்டர் தி.சிவக்குமார், கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா திட்ட இயக்குநர் டாக்டர் வி.கணபதி, சினம் இயக்குநர் ராம.பெருமாள், பாரம்பரிய சித்த வைத்திய மகா சங்க பொதுச் செயலாளர் கே.பி.அர்ச்சுனன் உள்ளிட்டோர் பேசினர்.

**புதிய ரக உரம் அறிமுகம்**

First Published : 03 Mar 2010 12:56:48 AM IST

திண்டிவனம் மார்ச் 2: திண்டிவனம் செஞ்சி ரோட்டில் உள்ள தனியார் உர டிப்போவில் கொரமேண்டல் இன்டர்நேசனல் உர நிறுவனம் சார்பில் ஒரு கிலோ கொள்ளளவு கொண்ட பாக்கெட்டில் உரம் அறிமுகம் மற்றும் விற்பனைத் தொடக்க விழா நடைபெற்றது.

சூப்பிரியா எனப்படும் இந்த உரம் தற்போது மார்க்கெட்டில் ஒரு கிலோ கொள்ளளவு கொண்ட பாக்கெட் வடிவத்தில் விவசாயிகளின் பயன் கருதி விற்பனைக்கு வந்துள்ளது.

விழாவில் நிறுவனத்தின் திருச்சி மண்டல மேலாளர் பாலகிருஷ்ணன் இந்த வகை உரம் பற்றி விளக்கி கூறியதோடு அதன் முதல் விற்பனையை தொடக்கி வைத்தார்.

**திருக்கோவிலூர் பகுதியில் சோளம் விளைச்சல் அமோகம்**

First Published : 03 Mar 2010 05:06:44 AM IST



திருக்கோவிலூரை அடுத்த எடுத்தனூர் கிராமப் பகுதியில் அதிகளவில் பயிரிட்டுள்ள சோளம்.

திருக்கோவிலூர், மார்ச் 2: திருக்கோவிலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பெரும்பாலான பகுதிகளில் அதிகளவில் சோளம் பயிரிடப்பட்டு வருகிறது.

திருக்கோவிலூர், முகையூர், ரிஷிவந்தியம், மூங்கில்துறைப்பட்டு, வடபொன்பரப்பி உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் கரும்பு, நெல், மணிலா போன்றவைகளை காட்டிலும் சோளம் பயிர் செய்வதையே மக்கள் அதிகளவில் விரும்புகின்றனர்.

குறைந்த தண்ணீரைக் கொண்டு 3 மாதத்தில் அறுவடைக்கு தயாராகும் சோளத்தில் அதிக லாபம் கிடைப்பதே இதற்கு காரணம் என விவசாயிகள் கூறுகின்றனர்.

இதில் குறிப்பாக ரிஷிவந்தியம் ஒன்றியத்துக்கு உட்பட்ட எடுத்தனூர் கிராமத்தில் மட்டும் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் சோளத்தை பயிரிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் விற்பனை நிலையங்களில் சோளம் மூட்டை 1-க்கு (100 கிலோ) அதிகபட்சம் ரூ.800-க்கு விலை போவதால் விவசாயிகள் தற்போது கவலையில் உள்ளனர்.

## பி.டி. பயிர் ரகங்களுக்கு நிரந்தர தடை விதிக்க வலியுறுத்தல்

First Published : 03 Mar 2010 04:08:08 AM IST



திருநெல்வேலி, மார்ச் 2: கத்தரிக்காய் மட்டுமன்றி, அனைத்துவகைப் பயிர்களிலும் மரபணு மாற்றப்பட்ட விதைகளுக்கு மத்திய அரசு நிரந்தர தடைவிதிக்க வேண்டும் என திருநெல்வேலியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற "பயிர்களின் மரபணு' குறித்த கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

"அன்னம் பசுமைக் கூடம்', "தமிழ் மருத்துவக் கழகம்', "சித்திரமும் கைப்பழக்கம்' ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இந்த கருத்தரங்கிற்கு கலை பண்பாட்டு இயக்கத் தலைவர் டி.டி. ரமேஷ் ராஜா தலைமை தாங்கினார். நல்லமுத்து இயற்கை வேளாண்மை மைய நிர்வாகி நா. கணேஷ் ராஜா, சிவா அறக்கட்டளை நிர்வாகி நாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசினர்.

கருத்தரங்கை திருநெல்வேலி சமூக சேவை சங்க இயக்குநர் ஜோசப் கென்னடி தொடக்கி வைத்துப் பேசினார். பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த மருத்துவர் கு. சிவராமன் சிறப்புரையாற்றினார். அவர் பேசியது:

கத்தரிக்காயில் மரபணு மாற்றப்பட்ட விதைகளை அனுமதித்தால் அது மற்ற பயிர்களையும் பாதிக்கும். அதுமட்டுமின்றி, இதர கத்தரி குடும்பத்தைச் சேர்ந்த செடிகளும் அழியும்.

பி.டி. பருத்தி 1983-ல் அறிமுகம் செய்யப்பட்டது. இன்று நாட்டில் 83 சதவீதம் பி.டி பருத்தி ரகம்தான் பயிரிடப்படுகிறது. இப்போது பி.டி. கத்தரிக்காயை அனுமதித்தால் இரண்டு, மூன்று ஆண்டுகளில் அது நாட்டு கத்தரிக்காயிலும் பாதிப்பை ஏற்படுத்தும். பி.டி. கத்தரிக்காய் இரண்டு, மூன்று பருவத்திற்கு பிறகு முளைக்கும் திறனை இழந்து விடும். அதன் பின்பு நாம் விதைக்கு வெளிநாட்டு நிறுவனத்தைதான் நம்பி இருக்க வேண்டும்.

கத்தரிக்காயில் மட்டுமன்றி வெண்டை, தக்காளி உள்ளிட்ட 51 பயிர்களில் இந்த மரபணு மாற்றப்பட்ட விதைகளை உற்பத்தி செய்யும் சோதனை நடைபெற்று வருகிறது. தக்காளியின் தோல் மெல்லியதாக இருக்கும். அது கீழே விழுந்தால் உடையாமல் இருக்க தவளையின் தோலில் உள்ள மரபணுவை தக்காளியில் புகுத்தி புதிய ரக தக்காளியை உற்பத்தி செய்யும் முயற்சி நடைபெற்று வருகிறது.

அரிசியில் பி.டி. ரகத்தை உற்பத்தி செய்யும் முயற்சி நடைபெற்று வருகிறது. அதற்கான சந்தை மதிப்பு அதிகம் என்பதால் அதில் அதிக தீவிரம் காட்டப்படுகிறது. இதையெல்லாம் அனுமதித்தால் நமது பாரம்பரிய பயிர் வகைகளை மீட்டெடுக்க முடியாது. இந்த பி.டி.விதைகள் மண்ணின் வளத்தையும் கெடுத்து விடும்.

இந்த பி.டி. ரக விதைகளை உற்பத்தி செய்யும் பன்னாட்டு நிறுவனங்களில் சில, புற்று நோய்க்கு மருந்து தயாரித்து விநியோகம் செய்கின்றன. பி.டி. ரக உணவு வகைகளை உண்போருக்கு வரும் நோய்களுக்கு அந்த விதைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களே மருந்தும் தயாரித்து விற்பனை செய்து லாபம் சம்பாதிக்கும் நிலை ஏற்பட்டு வருகிறது.

எனவே, நாம் இரண்டாவது சுதந்திர போராட்டத்தை நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். விவசாயிகள் மட்டுமன்றி, பொதுமக்களும் இதில் ஒன்று சேர்ந்து போராடி கத்தரிக்காய் உள்ளிட்ட எந்தவித மரபணு மாற்றப்பட்ட விதைகளையும் அனுமதிக்கக் கூடாது என மத்திய அரசை வலியுறுத்தி போராட வேண்டும் என்றார்.

கருத்தரங்கில் பேசிய அன்னம் பசுமைக் கூட நிர்வாகி கோமதிநாயகம், தமிழ் மருத்துவக் கழக நிர்வாகி சரவணன், இயற்கை வேளாண்மை அறிஞர் வைகை குமாரசாமி, புளியங்குடி அந்தோணிசாமி, கவிஞர் கிருஷி ஆகியோரும் மரபணு மாற்றப்பட்ட விதைகளுக்கு நிரந்தர தடை விதிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.
பி.டி. கத்தரிக்காய் குறித்து இயக்குநர் ஜா. தீபா இயக்கியுள்ள ஆவணப்படம் திரையிடப்பட்டு அதுகுறித்து விவாதிக்கப்பட்டது. முன்னதாக, "சித்திரமும் கைப்பழக்கம்' அமைப்பின் நிர்வாகி பா. கதிர் வரவேற்றார்.

தினமலர்

**'கேந்தி' மலர் விலை வீழ்ச்சி: விவசாயிகள் ஏமாற்றம்**

கடலூர் : விலை வீழ்ச்சி காரணமாக மலர் (கேந்தி) சாகுபடி செய்த விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதி தவிர ஏனைய பகுதிகளில் புஞ்சையில் மணிலா, காய்கறி பயிர் பிரதானமாக செய்து வந்தனர். கிராமப்பு புற வேலை வாய்ப்பு திட்டம் துவங்கிய பின்னர் விவசாயக் கூலியாட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்படியே வந்தாலும் அதிக கூலி, குறைந்த வேலை நேரத்தால் விவசாயிகளால் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் கூலியாட்கள் தேவைப்படாத சவுக்கு, தென்னை, எண்ணெய் பனை போன்ற பயிர்களை பயிரிட துவங்கினர். தற்போது பண்ருட்டி பகுதியில் முட்டை கோஸ், நூக்கல் போன்ற மலைக்காய்கறிகள் பயிரிடுகின்றனர். அதேப்போல் ஓசூரில் பயிரிடப்படும் "ஹைபிரிட்' வகை (கேந்தி) பூக்கள் கடலூர் மாவட்ட விவசாயிகள் பயிர் செய்ய துவங்கியுள்ளனர்.

உரம், தண்ணீர் மற்றும் பராமரிப்பு செலவு குறைவாக இந்த வகை மலர்கள் நல்ல விலை போவதாக கருதி கடலூர் பகுதிகளில் உள்ள கிராமங்களில் (கேந்தி) மலர்கள் சாகுபடி செய்யப்பட்டன. சாதாரணமாக கிலோ 25 ரூபாய் முதல் 40 வரை விலை போகும் இந்த மலர் தற்போது வெறும் 5 முதல் 10 ரூபாய்க்கு விலை போகிறது. செடிகளில் இருந்து பூக்களை பறித்து மார்க்கெட்டிற்கு கொண்டு வர குறைந்த பட்சம் கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் செலவாகும். உற்பத்தி செலவை விட குறைந்த விலைக்கு விற்பதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

மாசி மாதத்தில் திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் நடைபெறாது என்றாலும் மாசி மகத்தையொட்டி 2 வாரங்களில் கோவில் திருவிழாவிற்கு மலர் விற்பனை சூடு பிடிக்கும் என விவசாயிகள் காத்திருந்து திருவிழாவுக்கென பூக்களை அறுவடை செய்தனர். ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு மாசி மகத்திற்கு பூக்கள் விற்பனையாகாததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். இதே போல ஓசூரில் இருந்து கேந்தி (மஞ்சள், சிவப்பு) உள்ளிட்ட அனைத்து வகை மலர்களும் மார்க்கெட்டில் குவிவதால் கடலூரில் விளைவிக்கப்படும் பூக்கள் வேறு பகுதிகளுக்கு அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**கொள்முதல் நிலைய இலக்கை உயர்த்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

திண்டுக்கல்:கொள்முதல் நிலையங்களின் ஒரு நாள் இலக்கை, ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது. மாவட்ட செயலாளர் சச்சிதானந்தம் அறிக்கை:நிலக்கோட்டை தாலுகாவில் விளாம்பட்டி, ஆத்தூர் தாலுகாவில் சித்தையன்கோட்டை, ஆத்தூர், பழநி தாலுகாவில் பாலசமுத்திரம் ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளது.இங்கு விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்வதில் பல்வேறு பிரச்னை நிலவுகிறது.விளாம்பட்டியில் 3 ஆயிரம் மூடைகளும்,

சித்தையன்கோட்டையில் 4 ஆயிரம் மூடைகளும், ஆத்தூரில் 5 ஆயிரம் மூடைகளும், பாலசமுத்திரத்தில் 5 ஆயிரம் மூடைகளும் தேங்கியுள்ளன.

கொள்முதல் நிலையங்களில், ஒரு நாளுக்கு 35 கிலோ கொண்ட 700 சிப்பங்கள் மட்டுமே விவசாயிகளிடம் இருந்து பெறப்படுகிறது.விளாம்பட்டியில் அளவைக்கூலி என சிப்பத்திற்கு 12 ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. ஆத்தூர், சித்தையன்கோட்டை கொள்முதல் நிலையங்களில் 40 கிலோவிற்கும் அதிகமான சிப்பங்களாக பெறப்படுகின்றன. மேலும் ஒரு நாளுக்கான கொள்முதல் இலக்கு மூன்று லட்சம் வரையே என விவசாயிகளை இழுத்தடிக்கும் போக்கு தொடர்கிறது.இதில் உள்ள முறைகேடுகளை சரி செய்ய வேண்டும். ஒரு நாளுக்கான கொள்முதல் இலக்கை ஐந்து லட்சம் ரூபாயாகவும், கூடுதல் விளைச்சலுக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட பகுதியில் கொள்முதல் அளவை அதிகரிக்கவும் அரசு உத்தரவிட வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### மழை இல்லாததால் கருகும் பயிர்கள் வறட்சி பகுதியாக அறிவிக்க வலியுறுத்தல்

நத்தம்: நத்தம்,சாணார்பட்டியில் மழை இல்லாததால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.நத்தம் தொகுதியை வறட்சி தொகுதியாக அரசு அறிவித்து சலுகைகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.வேம்பார்பட்டி மா, புளி, தென்னை உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் கண்ணுமுகமது கூறியுள்ளதாவது: திண்டுக்கல் மாவட்டத் தில் கொடைக்கானலுக்கு அடுத்தாற் போல் நத்தம் அதிகளவு மழை பெறும் பகுதியாகும். ஆனால், இந்தாண்டில் வழக்கமாக பெய்யும் பருவ மழை மிக குறைந்தளவே பெய்ததால் கண்மாய், குளங்கள்,விவசாயக்கிணறுகளில் தண்ணீரின்றி தற்போது வறட்சி ஏற்பட்டுள்ளது.நிலத்தடி நீர்மட்டம் குறைந்து காணப்படுவதோடு விவசாயம் செய்யமுடியாமல் விளை நிலங்கள் வெறும் நிலங்களாக காட்சியளிக்கின்றன.கடந்த நவம்பர் ,டிசம்பரில் வடகிழக்கு பருவ மழையை நம்பி பயிர்செய்யப்பட்ட நெல், கடலை,வாழை, பருத்தி உட்பட இரவை பயிர்களும், சோளம், கம்பு, உளுந்து, தட்டைப்பயிர், மொச்சை, கொள்ளு உட்பட மானாவாரி பயிர்களும் காய்ந்து கிடக்கின் றன.தற்பொழுது சுட்டெரிக் கும் வெயிலின் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்து விட்டது.

தற்போது மா, புளி, தென்னை மரங்களில் மகசூல் இன்றி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். முழுமையான கோடைக் காலங்களான பங்குனி,சித்திரை,வைகாசி ஆகிய மாதங்களில் வெயிலின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் மேலும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கால்நடைகள் குடிப்பதற்கு கூட முடியாமல் வறட்சி ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது, எனவே அரசு நத்தம் தொகுதியை வறட்சி தொகுதியாக அறிவித்து விவசாயிகளுக்கு சலுகை வழங்க முன் வரவேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### தழையும் புங்கன்; கருகுது வேம்பு பங்குனியில் பூ கிடைக்குமா?

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் புங்கன் மரங்கள் செழிப்பாக துளிர்விட்டு தழைந்து வருகிறது. அதே சமயத்தில் வேப்ப மரங்கள் கருகி வருகின்றன. மரம் வளர்த்தால் மழை பெறலாம் என்பது முன்னோர் வாக்கு. பொதுவாக தை மாதம் இலை உதிர்ந்து மாசியில் மரம் தழைக்கும் என்பது பழமொழி. அதன்படி தை மாதம் தழை உதிர்ந்த புங்கன் மரம் தற்போது துளிர்விட்டு தழைத்து வருகிறது. சித்திரை மாதம் கடும் வெப்பம் வீசும்போது அனைவரும் புங்கமரத்தின் நிழலை தேடிச் செல்வர். அப்போது சூரியனுடைய ஒளி, நிழத்தில் விழாதவாறு புங்க மரம் தழைத்து செழிப்பாக, பசுமையாக காட்சியளிக்கும். ஆனால், தற்போது தழைய வேண்டிய தருணத்தில் உள்ள வேப்பமரம் கருகியுள்ளது. பங்குனி மாதம் 2ம் தேதி தெலுங்கு வருடப் பிறப்பு வருகிறது. அந்த சமயத்தில் வேப்பமரம் தழைத்து பூ பிடித்திருக்க வேண்டும். அந்த பூவை பறித்து சர்க்கரை கலந்து உண்பதே தெலுங்கு வருடப் பிறப்பின் சிறப்பு. தற்போது வேப்பமரங்கள் காய்ந்து கிடக்கும் நிலையில் பங்குனி மாதத்தில் வேப்பம் பூவுக்கு தட்டுப்பாடு வர வாய்ப்புள்ளது.

### தக்காளி விலை குறைவு

மதுரை: கேரளாவில் பந்த் காரணமாக, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு அம்மாநில வியாபாரிகள் வராததால் வெறிச்சோடியது. இதனால், மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. கிலோ 20 ரூபாய் வரை விற்ற ஒரு கிலோ தக்காளி நேற்று நான்கு ரூபாய்க்கு விற்கப்பட்டது. மற்ற காய்கறி விலை குறித்து, மார்க்கெட் சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது :ஒரு கிலோ கத்தரிக்காய் 9 ரூபாய், வெள்ளை கத்தரிக் காய் 7, பூசணி 5, புடலங்காய் 8, வெண்டைக்காய் 10, சுரைக்காய் 5, கேரட் 15, பச்சை மிளகாய் 10, ஆந்திர பச்சை மிளகாய் 8, பீர்க்கங்காய் 12, முட்டைகோஸ் 5, காலிபிளவர் 4-7, முள்ளங்கி 7, பீட்ரூட் 9, பீன்ஸ் 18, பட்டர் பீன்ஸ் 35, சோயா பீன்ஸ் 30, பட்டாணி 15-20, நூக்கல் 7, கீரை வகைகள் 7, உருளை கிழங்கு 12, சேனை கிழங்கு 18, கருணை கிழங்கு 19, கறிவேப்பிலை 25, புதினா 6, கொத்தமல்லி 5, இஞ்சி 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது என்றார். சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

### தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு விவசாயிகளுக்கு ரூ.12.15 லட்சம் மானியம்

மதுரை: மதுரை மாவட்டத்தில் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், வனத்துறையின் சமூக காடுகள் கோட்டம் சார்பில், விவசாயிகளுக்கு 12.15 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

இதற்கு விவசாயிகள் நில உடமைக்கான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளின் இரண்டு ஏக்கர் நிலத்தில் மரக்கன்றுகள் நடப்படும்.நன்கு பராமரிக்கப்பட்டு, உயிருடன் உள்ள சவுக்கு மரக்கன்றுகளுக்கு ஓராண்டிற்கு மட்டும் தலா 25 காசு, பிற கன்றுகளுக்கு தலா 5 ரூபாய் வீதம் ஒரு ஏக்கருக்கு 1000 ரூபாய் மானியம் வழங்கப்படும். இதன்படி, 2009-10 ல் மதுரை, மேலூர், உசிலம்பட்டி, வாடிப்பட்டி, அலங்காநல்லூர் உட்பட பல்வேறு பகுதிகளில் மூன்று லட்சம் சவுக்கு, தேக்கு, வேம்பு, குமிழ், பீநாரி (தீக்குச்சி) மரக்கன்றுகள் வனத்துறை சார்பில் நடப்பட்டன. மேலும் 90 ஆயிரம் மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப் பட்டது. இத்திட்டத்திற்கு தமிழக அரசு 29 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தது. இந்நிலையில், வனத்துறையினர் ஆய்வு செய்தனர். இதில், 767 விவசாயிகளின் 1215 ஏக்கருக்கு 12 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்க அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை ஸ்டேட் வங்கி கிளைகள் மூலம் வழங்கப்படும். மேலும், 2010-11 க்கு இத்திட்டத்தை அமல்படுத்த, வனத்துறையினர் அரசின் நிதி உதவியை எதிர்பார்க்கின்றனர்.

### மானியவிலையில் டி.ஏ.பி., உரவினியோகம்

மதுரை:""பயறு வகைகளில் நல்ல மகசூலைப் பெற, இலைவழி டி.ஏ.பி., தெளிப்பு அவசியம்," என, வேளாண் உதவி இயக்குனர் இளங்கோ தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை :பயறு வகைகளில் அதிக காய்கள் பிடித்தும், பூக்கள் உதிர்வதைத் தடுத்து மகசூலை அதிகரிக்க, டி.ஏ.பி., கரைசல் அவசியம். பூக்கும் நேரத்தில் இரண்டு சதவீத டி.ஏ.பி., கரைசலை காலை, மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் மூலம் செடி நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். இதேபோல காய்பிடிக்கும் நேரத்தில் தெளிக்கவேண்டும். ஒரு ஏக்கருக்கு நான்கரை கிலோ டி.ஏ.பி., உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து 12 மணி நேரம் ஊறவைக்க வேண்டும்.மறுநாள் காலையில் கரைசலை வடிகட்டி, அதனுடன் 215 லிட்டர் தண்ணீர் சேர்த்து, கைத்தெளிப்பான் மூலம் செடிகளில் தெளிக்கலாம். ஒருஏக்கருக்கு அதிகபட்சமாக 40 ரூபாய் செலவாகும். டி.கல்லுப்பட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் உரத்துடன் கைத்தெளிப்பான், விசைத் தெளிப்பானும் மானியவிலையில் வழங்கப்படுகிறது என, தெரிவித்துள்ளார்.

### கருவேல மரம் மூலம் ரூ.94.84 லட்சம் வருவாய்

மதுரை:வனத்துறை சமூக காடுகள் கோட்டம் மூலம், மதுரை மாவட்டத்திலுள்ள கண்மாய்களில் கருவேல், சீமைக் கருவேல் மரங்கள் நடப்படுகின்றன. பெரிய கூடக்கோவில், அங்காடிமங்கலம், தனிச்சியம், வடகரை, பரவை, கட்டியகாரன், இழுப்பக்குளம், தூம்பக்குளம், வாகைக்குளம், சொக்கநாதன்பட்டி, அரசபட்டி, பொலம்பி, வெள்ளைக் கண்மாய் உட்பட 15 கண்மாய்களில் கருவேல், சீமைக்கருவேல் மரங்களை வெட்ட ஏலம் விடப்பட்டது. இதன் மூலம் 94.84 லட்சம் ரூபாய் வனத்துறைக்கு வருவாய் கிடைத்துள்ளது. இதில் 60 சதவீத தொகை ஊராட்சிகளுக்கு வழங்கப்படும். கடந்த ஆண்டு 10 கண்மாய்கள் மூலம் 16.67 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்தது.

### நெல் கொள்முதல் விலை நிர்ணயிக்க வலியுறுத்தல்

மதுரை:மிக சன்னரக நெல் கொள்முதல் விலையை, ஆயிரத்து ஐநூறு ரூபாயாக அரசு நிர்ணயம் செய்ய வேண்டுமென, நீரினை பயன்படுத்துவோர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.சங்க தலைவர் மாயத்தேவன் கூறியதாவது: நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் சன்ன ரகம், மோட்டா ரகம் நெல், குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து நூறு மற்றும் ஆயிரத்து ஐம்பதிற்கு விவசாயிகளிடம் வாங்கப்படுகிறது. தற்போது விவசாயிகள் மிக சன்னரக நெற்களான ஜே.சி.எல்., கர்நாடகா பொன்னி மற்றும் சுவை போன்ற நெல் உற்பத்தி செய்துள்ளனர். இதனையும் வியபாரிகள் குறைந்த விலைக்கு வாங்குவதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.எனவே அரசு, மிகசன்னரக நெல்லுக்கு, குறைந்தபட்சம் குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து ஐநூறு என்று நிர்ணயம் செய்து, நேரடி கொள்முதல் மையங்களில் வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

### தேயிலை பறிக்கும் இயந்திரத்தை மானியத்தில் வழங்கினால் பயன்

கோத்தகிரி : "கோத்தகிரியில் பொரங்காடு சீமை நலச்சங்க நிர்வாகக் குழு கூட்டம் நடந்தது.கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:நீலகிரியில் மருத்துவ குணம் கொண்ட மூலிகை செடிகள் வளர்க்க ஏதுவான சீதோஷ்ண நிலை நிலவுகிறது. வருங்கால சந்ததிகள் நலன்கருதி, அத்தி, நெல்லி, கறிவேப்பிலை, வேப்பமரம், வில்வமரம் மற்றும் தும்பை உட்பட மருத்துவ குணம் கொண்ட மூலிகை செடிகளை விவசாயிகள் வளர்க்க தோட்டக்கலை துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்;பொராங்காடு சீமைக்கு உட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளை அரசின் உதவியுடன் ஏற்படுத்த, படித்த இளைஞர்கள் முன்வரவேண்டும்;தேயிலை தோட்டங்களில் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக பசுந்தேயிலை முதிர்ந்து வருவதால், விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதை தவிர்க்க, உபாசி மற்றும் தேயிலை வாரியம், விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் பசுந்தேயிலை பறிக்கும் இயந்திரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பன உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.நிர்வாகி ராஜூ வரவேற்றார். தலைவர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். நிர்வாகிகள் சிவாஜிராமன், காரிதாசன், குள்ளன், துரைராஜ், அஜ்ஜன் மற்றும் ராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க பொருளாளர் ஆலன் நன்றி கூறினார்.

### விவசாயத்தில் மாணவர்கள் பங்கேற்பு நல வாரியத் தலைவர் வேண்டுகோள்

சேலம்: ""விவசாயம் மற்றும் விவசாய மேம்பாட்டிற்காக மாணவர்கள் உழைக்கவேண்டும்" என்று தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள், விவசாயிகள் நல வாரியத்தலைவர் ராமலிங்கம் பேசினார். மத்திய நிலத்தடி நீர் வாரியம் மற்றும் சேலம் சோனா தொழில்நுட்ப கல்லூரி சார்பில், நீர்வள மேலாண்மை குறித்த 2வது நாள் கருத்தரங்கம் நேற்று நடந்தது. பரிதாபாத் மத்திய நிலத்தடி நீர் வாரிய உறுப்பினர் குணார் தலைமை வகித்தார். சேலம் மேல்காவிரி வடிநில வட்டம் கண்காணிப்புப் பொறியாளர் கணேச மாரச்சான், சோனா கல்லூரி முதல்வர் கோவிந்தராஜன், மண்டல இயக்குனர்

வரதராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
கருத்தரங்கில், தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள், விவசாயிகள் நல வாரியத்தலைவர் ராமலிங்கம் பேசியதாவது: இந்தியாவில் ஏழு மாநிலங்களில் நிலத்தடி நீர் மட்டம் குறைவாக உள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் குறைவாக உள்ளது. நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்க, மத்திய அரசு இவ்வாண்டு 4.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. நச்சுகளை சுத்திகரித்து ஆற்றில் விடுதல், சொட்டு நீர்பாசனம் ஆகியவற்றின் மூலம் நிலத்தடி நீரை அதிகப்படுத்தலாம். சிறிய நாடான இஸ்ரேலில் 19 சதுர கி.மீ., ஏரி மட்டுமே குடிப்பதற்கும், விவசாயத்திற்கும் நீர் ஆதாரமாக விளங்குகிறது. கழிவு நீரை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துகின்றனர். நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தி நீரை வீணாக்காமல் விவசாயத்திற்கு உபயோகப்படுத்துகின்றனர்.

தமிழகத்தை பொறுத்தவரை, பழமையான விவசாய முறைகள், வேலைக்கு ஆட்பற்றாக்குறை ஆகிய காரணங்களால் விவசாயத்தையும், விவசாயிகளையும் இரண்டாம் தரமாக பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மாற, இத்துறையில் மாணவர்கள் அதிகமாக பங்கேற்க வேண்டும். விவசாயம் மற்றும் விவசாய மேம்பாட்டிற்கு உழைக்கவேண்டும்.

ஒரு துளி நீரை வீணடிக்காத தொழில் நுட்பத்தை விஞ்ஞான ரீதியில் ஏற்படுத்தவேண்டும். ஒரு ஹெக்டேருக்கு அதிகபட்ச விளைச்சலை செய்வதற்கான வழிவகைகளை கண்டறியவேண்டும். நமக்கு தேவையான பருப்பு, பயிறு வகைகள் மொத்தம் 20 சதவீதம் மட்டுமே இங்கே விளைகிறது. பாக்கியுள்ள 80 சதவீதம், வெளிநாடுகளில் இறக்குமதி செய்யப்படுகிறது. நமக்கு வேண்டிய அளவு பருப்பு, பயிறு வகைகளை இங்கேயே உற்பத்தி செய்யவேண்டும். நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த விவசாயிகள் ஒத்துழைக்கவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

### அழுக்கு மாவு உண்ணும் மாடுகளை நோய் தாக்கும் நியூசிலாந்து நாட்டு நிபுணர் எச்சரிக்கை

ஆத்தூர்: ""மரவள்ளி கிழங்கின் அழுக்கு மாவு, திப்பிகளை கறவை மாடுகளுக்கு உணவாக கொடுத்தால் இரைப்பை நோய் பாதிப்புக்குள்ளாகும். இந்தியாவை போன்று நியூசிலாந்து நாட்டில் பால் விலை நிரந்தரம் இல்லை,'' என ஆத்தூர் அருகே நவீன பால் உற்பத்தி குறித்த கருத்தரங்கில் நியூசிலாந்து நாட்டு பால் உற்பத்தி தொழில்நுட்ப வல்லுனர் பேசினார். கறவை மாடு வளர்ப்பு, பால் உற்பத்தியில் புது வழிமுறை குறித்து தெரிந்து கொள்ளும் வகையிலான கூட்டம், ஆத்தூர் அருகே அம்மம்பாளையம் பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில் நடந்தது. கூட்டத்தில் நியூசிலாந்து நாட்டின் பால் உற்பத்தி தொழில்நுட்ப வல்லுனர் டாக்டர் ஷானேவிக்டேக்கர் பேசியதாவது: கறவை மாடுகள் வாங்கும்போது இனம், தன்மை பார்த்து தான் வாங்க வேண்டும்.

கன்று போட்ட சில நிமிடத்தில் சீம் பால் கறந்துவிட வேண்டும். அவ்வாறு பால் கறக்கவில்லை எனில் பால் சுரக்கும் மடி வீக்கம் ஏற்பட்டு நோய் தாக்கம் ஏற்படும். அதிகளவில் பால் உற்பத்தி செய்வதற்காக விவசாயிகள் எவ்வித ஆலோசனைகளும் இல்லாமல் அதிக தீவனம் கொடுக்கின்றனர். கறவை மாட்டுக்கு நாள்தோறும் 40 கிலோ பசுந்தீவனமும், ஐந்து கிலோ அடர் தீவனமான தவிடு, புண்ணாக்கு கொடுக்க வேண்டும். அளவுக்கு அதிகமாக தீவனம் கொடுத்தாலும் குறிப்பிட்ட அளவு தான் பால் சுரக்கும். இரவு நேரத்தில் நெல் பயிரின் வைக்கோல் கொடுக்க கூடாது. மரவள்ளி கிழங்கில் பிரித்தெடுக்கும் அழுக்கு மாவு, திப்பிகளை கறவை மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு வைப்பது கூடாது. அவ்வாறு கொடுத்து வந்தால் மாடுகளின் உடல் உறுப்பில் உள்ள இரைப்பை கெட்டுவிடும்.

நியூசிலாந்து நாட்டு கறவை மாடுகளுக்கு திறந்தவெளி பண்ணை முறை பயன்படுத்தப்படுகிறது. கறவை ஒவ்வொன்றும் 25 லிட்டர் அளவுக்கு பால் கறக்கும். ஒரு குடும்பத்தினர் 500 கறவை மாடு பராமரிக்கின்றனர். பால் விலை என்பது நிரந்தரம் கிடையாது, இன்று லிட்டர் 10 ரூபாய் என்றால் அடுத்த நாள் 8 ரூபாயும் இருக்கும்; கூடுதலாகவும் இருக்கும். பாலுக்கு அரசு நிரந்தர விலை நிர்ணயம் கொடுப்பதில்லை.

இந்தியாவில் குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து ஐந்து மாடு தான் வளர்க்கின்றனர். இங்குள்ள கறவை ஐந்து முதல் 10 லிட்டர் வரையே பால் கறக்கிறது. இங்கு பால் விலை நிரந்தர விலையாக இருப்பதால், விவசாயிகள் பயன்படுத்தி கொண்டு நல்ல லாபம் பெறலாம். பால் உற்பத்தியில் புதிதாக நவீன தொழில் நுட்ப முறைகளை பின்பற்றினால் தான் பால் உற்பத்தி அதிகமாகும், வருவாய் கூடுதலாக கிடைக்கும். இவ்வாறு பேசினார். அம்மம்பாளையம் பஞ்சாயத்து தலைவர் மகேஸ்வரி, குறிஞ்சி உழவர் மன்ற தலைவர் கோவிந்தராஜ், செயலாளர் முட்டல் ராஜ், ஹட்சன் டெய்ரி மற்றும் ஆவின் பால் உற்பத்தியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

### பயறு வகை வயல்களில் டி.ஏ.பி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

தஞ்சாவூர்: தஞ்சாவூர் அடுத்த காட்டுக்குறிச்சி கிராமத்தில் பயறு சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் டி.ஏ.பி., கரைசல் உரம் இலைவழி தெளிக்கும் இயக்கத்தை டி.ஆர்.ஓ., கருணாகரன் துவக்கி வைத்தார்.

வேளாண் உதவி இயக்குனர் குணசேகரன் வரவேற்றார். டி.ஆர்.ஓ., கருணாகரன் பேசியதாவது: மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் பயறு வகை பயிர்கள் உற்பத்தியை அதிகரிக்க தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் பல்வேறு தொழில் நுட்பங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, பயறு சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் டி.ஏ.பி., கரைசல் உரம் இலைவழி தெளிப்பதற்காக 17 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்டத்தில் உள்ள 8,500 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் உளுந்து மற்றும் பாசிப்பயறு வயல்களில் டி.ஏ.பி., கரைசல் உரம் இலைவழி தெளிக்க விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பயறு வகை பயிர்களுக்கு அடிஉரம் வழங்குவது கடினமாக இருப்பதால் இலைவழி உரம் தெளிப்பதன் மூலம் அதிக மகசூல் பெற முடியும் என்பதை உணர வேண்டும். தற்போது உணவு உற்பத்தி ஓரளவு தன்னிறைவு பெற்றுள்ள நிலையில் பயறு வகை தானியங்கள் உற்பத்தியும் அதிகரிக்க வேண்டியது அவசியமாகி உள்ளது. மாவட்ட விவசாயிகள் நெல் அறுவடைக்குப்பின் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் தெரிவிக்கும் தொழில் நுட்பங்களை கடைபிடித்து பயறு வகை தானியங்கள் உற்பத்திக்கு முன்வர வேண்டும் என்றார்.

வேளாண் இணை இயக்குனர் ரெகுநாதன் பேசுகையில், ""அம்மாபேட்டை வட்டத்தில் 700 ஹெக்டேரில் பயிறுவகை பயிர்களுக்கு டி.ஏ.டி., கரைசல் உரம் தெளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேர் பரப்பளவுக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ள வயலில் 25 கிலோ டி.ஏ.பி., கரைசல் உரம் தெளிக்க 243 ரூபாய் செலவாகும். இதில், அரசு 200 ரூபாய் மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள 43 ரூபாய் மட்டும் விவசாயி செலவு செய்து இலைவழி டி.ஏ.பி., கரைசல் உரம் தெளிப்பதன் மூலம் கூடுதல் மகசூல் பெறலாம்," என்றார்.

வேளாண் துணை இயக்குனர் சேகர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கலியபெருமாள் ஆகியோர் நவீன வேளாண் திட்டங்கள் குறித்து பேசினார். துணை இயக்குனர் கொளஞ்சி நன்றி கூறினார். மகளிர் குழுவினர்களுக்கு கோனாவீடார், மார்க்கர் கருவிகளும், விவசாயிகளுக்கு டி.ஏ.பி., உர மூட்டைகளையும் டி.ஆர்.ஓ., கருணாகரன் வழங்கினார்.

### சூரியகாந்தி, பப்பாளி, கொய்யா பயிரிடும் விவசாயிகள் கவனத்திற்கு

தேனி:தேனி மாவட்டத்தில் சூரியகாந்தி உள்பட பல்வேறு பயிர்களில் "மாவு' பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகளை வேளாண் துறையினர் அறிவித்துள்ளனர்.வேளாண் இணை இயக்குனர் நடராஜன் கூறியுள்ளதாவது: மாவட்டத்தில் பப்பாளி, செம்பருத்தி, சூரியகாந்தி,பார்த்தீனியம் மற்றும்கொய்யா பயிர்களில் மாவு பூச்சிதாக்குதல்பரவலாக காணப்படுகிறது. கோடை காலத்தில் இப்பூச்சிகள் எளிதாக உற்பத்தி பெருக்கமாக சாதகமான சூழ்நிலை இருக்கிறது. பூச்சிகளின் தாக்குதலை கண்டறிந்து உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும்.இப்பூச்சிகள் இளம் சிவப்பு நிறத்திலும், சில வகை கருப்பு, ஊதா மற்றும் மஞ்சள் நிறங்களிலும் காணப்படும். தாக்கப்பட்ட பயிர் வெண்மை

நிறமாக,பஞ்சு படர்ந்ததுபோல் காணப்படும். சிவப்பு மற்றும் கறுப்பு எரும்புகளின் நடமாட்டம் தென்படும்.

பளபளப்பான ஒட்டும் தன்மை கொண்டதேன் போன்ற திரவம் இலை மற்றும் இதர பாகங்களில் காணப்படும். அதன் மீது கறுப்பு நிற பூசனத்தின்தாக்குதல் தென்படும். வேப்பெண்ணை ஒரு சதவீதம் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதத்தை, சேதம் குறைவாக இருக்கும் போது, தாக்கப்பட்ட செடிகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தெளித்தல் வேண்டும். சேதம் அதிகம் காணப்பட்டால், புரெப்பனோபாஸ் 50 இசி ஒருலிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி., அல்லது குளோரி பைரிபாஸ் 20 இசி ஒருலிட்டர் தண்ணீருக்கு 5 மி.லி., அல்லது �டைமித்தோயேட் ஒருலிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி., மருந்துகளை தெளிக்க வேண்டும் என்றார்.

## எதிர்கால சந்தியினரை பாதுகாக்க பி.டி.ரக விதைகளுக்கு நிரந்த தடை: நெல்லை கருத்தரங்கில் வலியுறுத்தல்

திருநெல்வேலி:பி.டி.ரக விதைகளுக்கு நிரந்தர தடை விதித்து எதிர்கால சந்தியினரை பாதுகாக்கவேண்டும் என நெல்லையில் நடந்த கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.தமிழ் மருத்துவக் கழகம், அன்னம் பசுமைக் கூடம், சித்திரமும் கைப்பழக்கம் ஓவிய இயக்கம் சார்பில் பயிர்களில் மரபணு மாற்ற பாதிப்பு குறித்த கருத்தரங்கம் நெல்லையில் நடந்தது. நெல்லை தமிழ்வளர்ச்சி பண்பாட்டு மைய செயலாளர் ரமேஷ் ராஜா தலைமை வகித்தார். இயற்கை வேளாண்மை மையம் கணேசராஜா முன்னிலை வகித்தார்.

சென்னை சித்த மருத்துவ டாக்டர் சிவராமன் பேசியதாவது:மரபணு மாற்று பயிர்கள் விவசாய உற்பத்தியை பெருக்கவோ, விவசாயிகளுக்கு லாபத்தை பெருக்கவோ உற்பத்தி செய்யப்படவில்லை. செடிகளில் பூச்சிகளின் பாதிப்புக்களை கட்டுப்படுத்த தான் மரபணு மாற்றுப்பயிர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மரபணு மாற்றுப் பயிர்களில் பூச்சி, புழுக்களை கட்டுப்படுத்தும் நச்சுத் தன்மை உள்ளது. கத்திரிக்காய் மூலம் எதிர்காலத்தில் என்னென்ன பாதிப்புக்கள் ஏற்படும் என்று முழுமையாக தெரிவிக்கவில்லை. இந்த கத்திரிக்காய் மூலம் தோல் நோய்கள், மலட்டுத் தன்மை, அலர்ஜி, சிறுநீரக கோளாறு ஆகியவை ஏற்படும் என பல டாக்டர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதனால் பி.டி.கத்திரிக்காய்க்கு பல நாடுகள் தடை விதித்துள்ளன. இந்தியாவில் பி.டி.பருத்தி மூலம் ஏராளமான விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர். ஏராளமான கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது இதை பயன்படுத்த துவங்கிவிட்டால் எதிர்காலத்தில் உண்மையான விதை கிடைக்காது.

பி.டி.கத்திரிக்காய் அருகே பயிரிடப்பட்ட இடத்தில் உள்ள நாட்டு கத்திரிக்காய் கூட மகரந்த சேர்க்கையால் பி.டி.கத்திரிக்காய் ஆக மாறும். கருவில் உள்ள குழந்தைகளுக்கு கூட பாதிப்பு ஏற்படும். எனவே பி.டி.ரக விதைகளை நிரந்தரமாக தடை செய்து எதிர்கால சந்ததிகளை பாதுகாக்கவேண்டும். பி.டி.ரக கத்திரிக்காய் மற்றும் மரபணு மாற்றுப்பயிர்களை தடுக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்.இவ்வாறு டாக்டர் சிவராமன் பேசினார்.

கருத்தரங்கில் பி.டி.கத்திரிக்காயால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்த ஆவணப்படம் திரையிடப்பட்டது. பி.டி.ரக விதைகளை அனுமதிக்க கூடாது என கையெழுத்து வாங்கப்பட்டது. இது பிரதமர் மன்மோகன்சிங், முதல்வர் கருணாநிதிக்கு அனுப்பப்படவுள்ளது. கருத்தரங்கில் நம் மண்ணில் விளையும் காய்கள், நெற்பயிர்கள், பழங்களை அழிக்கும் வகையில் மரபணு மாற்றம் என்ற பெயரில் வரவுள்ள தீமைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டன.

கருத்தரங்கில் சித்திரமும் கைப்பழக்கம் அமைப்பு கதிர் வரவேற்றார். சிவா அறக்கட்டளை நாராயணன், டி.எஸ்.எஸ்.இயக்குனர் கென்னடி அடிகள், அன்னம் பசுமைக்கூடம் கோமதிநாயகம், இயற்கை வேளாண் அறிஞர் வைகை குமாரசாமி, எழுத்தாளர் கிருஷி, தமிழ் மருத்துவக் கழக மருத்துவர் சரவணன், பேராசிரியர் ராமச்சந்திரன், அந்தோணிசாமி உட்பட பலர் பேசினர்.இயக்குனர் தீபாவுடன், பார்வையாளர்கள் கலந்துரையாடினர்.

## கீழ்கூடலூர் கிராம விவசாயிகளுக்கு உளுந்து விதை பற்றி பயிற்சி முகாம்

திண்டிவனம் : கீழ்கூடலூர் கிராமத் தில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது.திண்டிவனத்திலுள்ள வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் விதை கிராம திட்டத்தின் கீழ் உளுந்து மற்றும் பச்சைப்பயிறு விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்படி ஒலக்கூர் ஒன்றியம் கீழ்கூடலூரில் உளுந்து பயிரிட் டுள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் அறிவியல் நிலையத்தில் விதை அறிவியல் துறை உதவி பேராசிரியராக பணியாற்றும் நடராஜன் மூலம் உளுந்து பயிர் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. விவசாயிகள் மற்றும் கூலித்தொழிலாளர்களுக்கு உளுந்து விதைப்பதிலிருந்து அறு வடை செய்வது வரையில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் விளக்கப் பட்டது.

## தர்பூசணி விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

திண்டிவனம் : திண்டிவனம் பகுதியில் தர்பூசணியின் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.திண்டிவனம் தாலுகா சூணாம்பேடு பகுதிகளில் தர்பூசணி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் 12 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் தர்பூசணி சாகுபடி செய் யப் பட்டுள்ளது. திண்டிவனம் பகுதியில் பொங்கல் நேரத்தில் அறுவடை செய் யப்பட்ட தர்பூசணி ஒரு டன் 3,800 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப் பட்டது. பிறகு படிப்படியாக விலை குறைந்து பத்து நாட்களுக்கு முன்பு ஒரு டன் 2800 ரூபாய்க்கு கொள்முதல் செய்தனர். தற்போது கோடைகாலம் துவங்கி விட்டதால் பொதுமக்கள் வெயிலை தாக்குப்பிடிக்க தர்பூசணியை விரும்பி வாங்கத் துவங்கியுள்ளனர். இதனால் திண்டிவனம் பகுதியில் தற்போது டன் 4,000 ரூபாய் வரை தர்பூசணி விலை உயர்ந்துள்ளது. ஒரு ஏக் கர் நிலத் தில் தற்போது பத்து டன் வரை தர்பூசணி மகசூல் கிடைக் கிறது. ஒரு ஏக்கருக்கு விவசாயிக்கு 8,000 ரூபாயிலிருந்து 10 ஆயிரம் வரை செலவாகிறது. இந் தாண்டு தர்பூசணி பயிரிட் டுள்ள விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத் துள்ளதால் மகிழ்ச்சிய டைந்துள்ளனர்.

## மா மரங்களில் தத்துப்பூச்சி கட்டுப்படுத்த ஆலோசனை

ஸ்ரீவில்லிபுத்தூர்: மா மரங்களில் தத்துப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஸ்ரீவி.,பருத்தி ஆராய்ச்சி நிலைய முதல்வர் ராமலிங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரிவித்ததாவது: தற்போது மா மரங்களில் பூங்கொத்துகள் உருவாகியுள்ளன. இந்நிலையில் மா இலைகளில் எண்ணைய் தேய்த்து விட்டது போல் மினுமினுப்பாக, பிசுபிசுப்புடன் இருந்தால் அம்மரங்களில் பூங்கொத்துகளில் தத்துப்பூச்சிகள் தாக்குதல் ஏற்படுத்தியிருக்கும். இப்பூச்சிகள் முட்டைகளை இளங்குருத்துக்கள், பூ கொத்துக்கள், இலை போன்றவைகளில் துளைத்து வைக்கின்றன. இதனால் முட்டை உட் செலுத்தப் பட்ட பகுதிக்கு மேற்பகுதி வாடி கருகி விடும். முழு வளர்ச்சியடைந்த தத்துப் பூச்சிகள் இலைக்குருத்து, பூங்கொத்துக்களின் சாற்றினை உறிஞ்சுகின்றன.

இதனால் பூங் கொத்துக்கள் வலுவிழந்து பூ, மொட்டுக்கள், இளம் பிஞ்சு மாங்காய்கள் உதிர்ந்து விடுகின்றன. இப் பூச்சிகள் வெளியேற்றும் கழிவுகள் இலைகளின் மீது படிந்து கரும்பூசாணம் வளர வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் இலைகளில் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படுகின்றன. நெருக்கமாக நடப்பட்ட தோப்புகளில் இந்நோய் விரைந்து பரவும். மல்கோவா, நீலம், செந்தூரம் போன்ற ரகங்கள் எளிதில் இப்பூச்சிகளால் விரைவில் பாதிப்பு ஏற்படும். பெங்களூரா, சப்பட்டை ரகங்களில் தாக்குதல் குறைவாக காணப்படும். இப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த முடிந்தவரை பாதிப்புக்குள்ளான பூங்கொத்துக்களை கவாத்து செய்து அகற்றி எரித்து விட வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் அசிப்பேட் அல்லது ஒன்றரை மில்லி பாசலோன் அல்லது ஒன்றே கால் மில்லி மானோகுரோட்டோபாஸ் வீதம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். மருந்து கரைசல் நன்கு படிவதற்காக

சான்டோவிட், இன்ட்ரான், ஸ்டிக்கால் போன்ற திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு அரை மில்லி வீதம் சேர்த்து கலக்கி தெளித்து கட்டுப்படுத்தலாம். என ராமலிங்கம் தெரிவித்தார்.

### அறுவடை சீசன் துவக்கம்: காலிப்ளவர் விலை வீழ்ச்சி

உடுமலை : அறுவடை சீசனில் காலிப்ளவர் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் உடுமலை பகுதி விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் மாற்றுப்பயிராக கிணற்றுப்பாசனத்திற்கு விவசாயிகள் காலி ப்ளவர் பயிரிட துவங்கியுள்ளனர். கடந்தாண்டு காலிப்ளவருக்கு நல்ல விலை கிடைத்தால் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.அறுவடை துவங்கியுள்ள நிலையில் விலை கடந்த சில நாட்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஒட்டன் சத்திரம் போன்ற பகுதிகளிலிருந்து உள்ளூர் சந்தைக்கு வரத்து அதிகரித்துள்ளது. ஒரு பூவின் விலை ஐந்து ரூபாய்க்கு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.மாற்றுப்பயிரும் நஷ்டத்தை ஏற்படுத்தும் நிலை உள்ளதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

ஆலாமரத்தூர் விவசாயிகள் றியதாவது:வெங்காயம், தக்காளி போன்ற காய்கறி பயிர்களுக்கு நிலையான விலை கிடைக்காததையடுத்து மாற்றுப்பயிர்கள் பயிரிட்டு வருகிறோம். காலிப்ளவர் சாகுபடியில் ஏக்கருக்கு 20 ஆயிரம் வரை செலவு பிடிக்கிறது. 60வது நாளில் காலிப்ளவர் அறுவடைக்கு வரும். இந்த சீசனில் பூச்சித்தாக்குதல் அதிகம் இருந்ததால் மருந்து செலவு கூடுதலாக பிடித்தது. விளைச்சல் நன்றாக இருந்தாலும் விலை குறைந்துள்ளதால் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது.வெளிமாவட்டங்களிலிருந்து உள்ளூர் சந்தைக்கு வரத்து அதிகரித்துள்ளதால், விலை ஐந்து ரூபாயாக குறைந்துள்ளது. பூ ஒன்றுக்கு பத்து ரூபாய் விலை கிடைத்தால் மட்டுமே லாபம் கிடைக்கும் இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

### விவசாயிகளுக்கு சுற்றுலா

திருப்பூர் : வாழை பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைப்பது குறித்து, விவசாயிகளை சுற்றுலா அழைத்து செல்கிறது, தோட்டக்கலை துறை; விருப்பமுள்ள விவசாயிகள், முன்பதிவு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது,திருப்பூர் தோட்டக்கலைத்துறை ஆத்மா திட்டத்தில், சொட்டு நீர் பாசன முறைகள் குறித்த சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அம்மாபேட்டை, சென்னம்பட்டி கிராமத்தில் வாழைப்பயிருக்கு, சொட்டு நீர் பாசன முறை பயன்படுத்தப்படுகிறது.சொட்டு நீர் பாசன முறை மூலம், திருப்பூர் விவசாயிகளும் பயன்பெற, விவசாயிகளை சுற்றுலா அழைத்து செல்கின்றனர்.சுற்றுலா செல்ல விருப்பமுள்ள விவசாயிகள், பெயர் மற்றும் முகவரியை முன்பதிவு செய்ய வேண்டும். திருப்பூர் ஒன்றிய அலுவலக வளாகத் தில் உள்ள, தோட்டக்கலை துறை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமைக்குள் பதிவு செய்ய வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### கோ-43 நெல் ரகத்தில் நெல் பழங்கள்

*மார்ச்* 02,2010,22:42 IST



கோ-43 நெல் ரகம் கடந்த 30 வருடங்களாக சாகுபடியில் இருந்து விவசாயிகளை மகிழ்வித்து வருகின்றது. இந்த ரகத்தை கண்டுபிடித்தது நெல் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் ஆகும். இது களர் நிலத்திற்காக கண்டுபிடித்த ரகமாகும். ஆனால் இதன் மகசூலினையும், அரிசியின் தரத்தையும் கருத்தில் கொண்டு விவசாயிகள் எல்லா வகை மண்ணிலும் சாகுபடி செய்கின்றனர்.

கோ-43 நெல் ரகம் பச்சரிசிக்கு ஏற்றது. மேலும் ஐ.ஆர்.20 அரிசி போல் பலகாரங்கள் செய்வதற்கும் ஏற்றது. வியா�பாரிகள் நல்ல விலை கொடுத்து வாங்கு கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் இந்த ரகம் தாளடியிலும் மற்றும் ஒருபோக நஞ்சை நிலங்களிலும் சாகுபடி செய்யப்படுகின்றது. இதன் மகசூல் நல்ல சூழ் நிலையில் ஏக்கரில் இரண்டரை முதல் மூன்று டன் வரை உள்ளது. இந்த வருடம் திடீரென்று கோ-43 நெல் ரகத்தை ""ஸ்மட்" என்ற வியாதி தாக்கியது. இந்த பிரச்னையை விவசாயிகள் நெல் பழம் என்பார்கள். நெல்லானது இலந்தை பழம் போல் உருண்டைவடிவத்தை அடைந்து நெல் ராசியின் தரத்தை குறைத்துவிடும்.

இதுவரை கண்டிராத அளவிற்கு நெல் பழம் விழுந்துள்ளது. நெல் பழம் விழுந்தால் மகசூல் சற்று கூடுதலாக இருக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் உள்ளது. இருப்பினும் நெல் பழம் விழுந்ததால் அதிக மகசூல் கிடைக்காவிட்டாலும் விவசாயிகளுக்கு நஷ்டம் வரவில்லை. நெல் ராசியில் நெல் பழங்களை (பாதிக்கப் பட்ட நெல் மணி) அகற்ற ராசியை தூற்றினால் அகலுவதில்லை. அதற்கு பதிலாக விவசாயிகள் நெல் தானியத்தை பட்டரை போடுகிறார்கள். அதாவது ராசியாக குவிப்பது ஆகும். அவ்வாறு செய்யும் போது நெல் பழங்கள் ராசியின் உச்சியிலிருந்து கோலிக்குண்டு உருண்டு ஓடுவது போல் கீழே தரை நோக்கி உருண்டு வந்து சேர்ந்துவிடும்.

உடனே இப்பழங்களை துடைப்பம் கொண்டு பெருக்கி அகற்றிவிடலாம். இந்த மாதிரி விவசாயிகள் செய்து நெல் பழங்களை அகற்றி நெல்லை பவுன் நிறத்திற்கு கொண்டுவந்துவிட்டனர். நெல்லினை சுத்தம் செய்ய அதிகம் செலவு ஏற்படவில்லை. சில சமயோஜித மான விவசாயிகள் கீழ்க்கண்ட பணிகளை செய்துவயலில் நெல் பழங்கள் விழாமல் தடுத்து விட்டனர். கீழ்க்கண்ட பணிகள் நெல் பயிரில் 10 சதவீத அளவு கதிர்கள் வெளிவந்த பிறகு செய்யப்பட்டன.

* முன்னதாக நிலங்களுக்கு பசுந்தழைகள் இட்டு நிலத்தில் உழவு செய்தனர்.

* ஒரு லிட்டர் நீருக்கு ""டில்ட்" என்னும் மருந்தினை ஒரு மில்லி என்ற விகிதத்தில் கலவை தயார் செய்து தெளிக்கப்பட்டது.

* டபுள் என்னும் பயிர் ஊக்கியை 25 மில்லி அளவினை 60 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கப் பட்டது. (இதனால் நெல்மணிகள் சிறந்த நிறத்தினைக் கொண்டன).

விவசாயிகள் பாடுபட்டு உழைத்து தங்கள் செல்லப்பிள்ளை யாக கோ-43 ரகத்தை பாதுகாத்து நல்ல ஆதாயம் பெற்றனர். டிபிசியில் நெல்லை விற்கும்போது கிலோ நெல்லுக்கு ரூ.11.00 விலை கிடைத்தது. விவசாயிகளுக்கு செலவு போக கணிசமான அளவு நிகர லாபம் கிடைத்தது. -எஸ்.எஸ்.நாகராஜன

### ஒரு டன் கரும்புக்கு ரூ.2500 வழங்க வேண்டும் கரும்பு விவசாயிகள் மாநாட்டில் வலியுறுத்தல்

Erode செவ்வாய்க்கிழமை, மார்ச் 02, 4:49 PM IST

ஈரோடு மல்லிகை அரங்கில் கரும்பு விவசாயிகள் கோரிக்கை மாநாடு ஈரோடு மாவட்ட விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் காசியண்ணன் தலைமையில் நடந்தது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் துளசிமணி வரவேற்று பேசினார். பொதுச்செயலாளர் துரைமாணிக்கம் சிறப்புரை ஆற்றினார். மாநாட்டில் வடிவேல், ராஜூ, ஈஸ்வரமூர்த்தி, பி.எஸ்.பழனிச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

8.5 சதவீதம் சர்க்கரை சத்து கரும்புக்கு டன்னுக்கு ரூ.2500 விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை கேட்டு கொள்வது. நெல் குவிண்டால் ரூ.1500 மற்றும் தேங்காய், பால், மரவள்ளிக் கிழங்கு மற்றும் விளை பொருட்களுக்கு தகுந்த விலை நிர்ணயம் செய்திட கேட்டு கொள்வது உள்பட பல தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.